**Revised**

**செய்தி வெளியீடு எண் : 436** **நாள் : 03.03.2023**

# மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் நீர்வளத்துறையின் அனைத்து மண்டல ஆய்வுக்கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது

********

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் நீர்வளத்துறையின் செயல்பாடுகள், துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப்பணிகளின் முன்னேற்றம் மற்றும் 2023 – 2024ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் புதிதாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் சரபங்கா திட்டம், தாமிரபரணி – கருமேனியாறு இணைப்புத்திட்டம், அத்திக்கடவு அவினாசி திட்டம், மற்றும் காவிரி – குண்டாறு இணைப்புத்திட்டம் போன்ற பல்வேறு முக்கிய திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் அப்பணிகளை விரைவில் முடிப்பது தொடர்பாக கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. மேலும், முதற்கட்டமாக பக்கிங்காம் கால்வாயின் மத்திய பகுதி புனரமைப்பு செய்வது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் நடைபெற்று வரும் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடித்திட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் உடனடியாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக திட்டமதிப்பீடுகளை தயார் செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., நீர்வளத்துறை அரசு கூடுதல் செயலாளர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., காவிரி தொழில்நுட்பக் குழுத்தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியன், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் திரு. கு.இராமமூர்த்தி, திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் திரு. ச.இராமமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் திரு. ஜி. முரளிதரன், கோயம்புதூர் மண்டல தலைமைப் பொறியாளர் திரு. பி. முத்துசாமி, மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் திரு. எஸ். ஞானசேகரன், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் திரு. சி. பொன்ராஜ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in